உ

# நான் யார்?

## ஸ்ரீ ரமண பகவான் அருண்மொழி

(வினா - விடை வடிவம்)




**பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி**
**ஆன்ம ஞானபீடம்**
**கொழும்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/ திருமதி/ செல்வி
ஓர் அன்பர்
அவர்கள் நன்கொடையாக அளித்தது
திகதி 14/05/2017.

Dr. E. THAVARAJAH
MBBS (SL) DFM (SL) MCGP (ASC)
REG No. 9205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?

## ஸ்ரீ ரமண பகவான் அருண்மொழி

[வினா – விடை வடிவம்]

V.S.ரமணன், தலைவர் ஸ்ரீ ரமணாச்ரமம் திருவண்ணாமலை - தமிழ்நாடு - இந்தியா. அவர்கள் எழுத்து மூலமாக அனுமதியை வழங்கி ஆசியையும், உந்துதலையும் தந்தமைக்கு எமது நன்றிகள்.


| | | |
|---|---|---|
| முதல்பதிப்பு | :- | 2010 |
| பிரதிகள் | :- | 1,000 |
| விலை | :- | 12/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரங்கள்

ஒவ்வொரு ஞாயிறும் மற்றும் பூரணை நாட்களிலும் பிற்பகல் 3.00 மணிக்கு

- உபாசனம்
- தியானம்
- விசாரம் ஆகிய இலவசப் பயிற்சிகள் நடைபெறும்.
- இடம் :-

ஆனந்தசாகரா
இல, 42,
சிறபறி கார்டன்ஸ்,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04.

தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| திரு. சிபி | - 0714895019 |
| திரு. ஆனந்தராஜா | - 0712465456 |
| திரு. தவராஜா | - 0714273419 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை


பூமியின் ஹ்ருதயமும் நினைக்க முத்தி தரவல்லதுமான ஸ்ரீ அருணாசலத்தில் விரூபாக்ஷ குகையில் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகளது அருந்தவ மோனத்தால் அவர்பால் ஈர்க்கப்பெற்ற பக்தர்கள் பலருள் ஒருவரான சிவப்பிரகாசம் பிள்ளை என்னும் அன்பர் 1901, 1902ல் மஹர்ஷிகளை அணுகி, உண்மையை உணர்ந்த படி தமக்குபதேசிக்கும்படி வினயத்துடன் வேண்டிக் கேட்ட வினாக்கட்கு, மஹர்ஷிகள் அவ்வப்போது தமிழில் எழுதித் தந்த விடை தான் 'நான் யார்' என்னும் சிறுநூலாக உருப்பெற்றிருக்கிறது. இறைஇன்பம் நாடும் அன்பர்களுக்கு இது பயன்படும் நூலாக அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

*பதிப்பாளர்*

Dr- தவராஜா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் யார்?

சகல ஜீவர்களும் துக்கமென்பதின்றி எப்போதும் சுகமாயிருக்க விரும்புவதாலும், யாவர்க்கும் தன்னிடத்திலேயே பரம பிரியமாயிருப்பதாலும், மனமற்ற நித்திரையில தினம் அனுபவிக்கும் தன் சுபாவமான அச் சுகத்தை அடையத் தன்னைத் தானறிதல வேண்டும். அதற்கு நான் யார் என்னும் ஞான விசாரமே முக்கிய சாதனம்.

01. நான் யார்?

ஸப்த தாதுக்களாலாகிய ஸ்தூ:ல தேகம் நானன்று, சப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்தமெனும் பஞ்ச விஷயங் களையும் தனித்தனியே அறிகின்ற சுரோத்திரம், துவக்கு, சக்ஷுஸ்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிஹ்வை, கிராணமென்கின்ற ஞானேந் திரியங்கள் ஐந்தும் நானன்று. வசனம், கமனம், தானம், மல விஸர்ஜ்ஜனம், ஆனந்தித்தல் என்னும் ஐந்து தொழில் களையும் செய்கின்ற வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்னும் கன்மேந் திரியங்கள ஐந்தும் நானன்று. சுவாஸாதி ஐந்தொழில்களையும் செய்கின்ற பிராணாதி பஞ்ச வாயுக்களும நானன்று. நினைக்கின்ற மனமும் நானன்று, சர்வ விஷயங்களும் சர்வ தொழில்களும் அற்று, விஷய வாசனைகளுடன் மாத்திரம் பொருந்தி யிருக்கும் அஞ்ஞானமும் நானன்று.

**02. இவையெல்லாம் நானல்லாவிடில் பின்னர் நான் யார்?**

மேற்சொல்லிய யாவும் நானல்ல என்று 'நேதி' செய்து தனித்து நிற்கும் அறிவே நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03. அறிவின் சொரூபம் என்ன?**

அறிவின் சொரூபம் சச்சிதானந்தம்

**04. சொரூப தரிசனம் எப்போது கிடைக்கும்?**

திருசியமாகிய ஜகம் நீங்கிய விடத்துத் திருக்காகிய சொரூப தரிசனம் உண்டாகும்.

**05. ஜகமுள்ள (தோன்றுகின்ற) போதே சொரூப தரிசனம் உண்டாகாதா?**

உண்டாகாது

**06. ஏன்?**

திருக்கும் திருசியமும், ரஜ்ஜுவும் சர்ப்பமும் போன்றவை. கற்பித சர்ப்ப ஞானம் போனாலொழிய அதிஷ்டான ரஜ்ஜுஞானம் உண்டாகாதது போல, கற்பிதமான ஜகதிருஷ்டி நீங்கினா லொழிய அதிஷ்டான சொரூப தரிசனம் உண்டாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. திருசியமாகிய ஜகம் எப்போது நீங்கும்?

சர்வ அறிவிற்கும், சர்வ தொழிலிற்கும காரணமாகிய மனம் அடங்கினால் ஜகம் மறையும்.

08. மனதின் சொரூபம் என்ன?

மனம் என்பது ஆத்ம சொரூபத்தில் உள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக் கின்றது. நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்ற போது தனியாய் மனமென்றோர் பொருளில்லை; ஆகையால் நினைவே மனதின் சொரூபம். நினைவுகளைத் தவிர்த்து ஜகமென்றோர் பொருள் அன்னியமாய இல்லை; தூர்க்கத்தில் நினைவுகள் இல்லை, ஜகமுமில்லை; ஜாக்ர சொப்பனங்களில் நினைவுகளுள,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜகமும் உண்டு. சிலந்திப்பூச்சி எப்படித் தன்னிடமிருந்து, வெளியில் நூலை நூற்று மறுபடியும் தன்னுள் இழுத்துக் கொள்கிறதோ, அப்படியே மனமும் தன்னிடத்திலிருந்து ஜகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னிடமே ஒடுக்கிக் கொள்கிறது. மனம் ஆத்ம சொரூபத்தினின்று வெளிப்படும் போது ஜகம் தோன்றும். ஆகையால், ஜகம் தோன்றும் போது சொரூபம் தோன்றாது; சொரூபம் தோன்றும் (பிரகாசிக்கும்) போது ஜகம் தோன்றாது; மனதின் சொரூபத்தை விசாரித்துக்கொண்டே போனால் மனம் தானாய் முடியும். தான் என்பது ஆத்ம சொரூபமே. மனம் எப்போதும் ஒரு ஸ்தூலத்தை அனுசரித்தே நிற்கும்; தனியாய் நிற்காது. மனமே சூக்ஷ்மசரீர மென்றும் ஜீவ னென்றும் சொல்லப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**09. மனதின் சொரூபத்தை விசாரித்தறியும் மார்க்கம் என்ன?**

இந்த தேகத்தில் **நான்** என்று கிளம்புவதெதுவோ அஃதே மனமாம். நான் என்கிற நினைவு தேகத்தில் முதலில் எந்தவிடத்திற் தோன்றுகின்றது என்று விசாரித்தால், ஹ்ருதயத்தில் என்று தெரிய வரும். அதுவே மனதின் பிறப்பிடம். நான், நான் என்று கருதிக் கொண்டிருந்தாலும்கூட அவ்விடத்திற் கொண்டு போய் விட்டுவிடும். மனதில் தோன்றும் நினைவுகள் எல்லாவற்றிற்கும் நான் என்னும் நினைவே முதல் நினைவு. இது எழுந்த பின்பே ஏனைய நினைவுகள் எழுகின்றன. தன்மை தோன்றிய பின்பே, முன்னிலை, படர்க்கைகள் தோன்றுகின்றன; தன்மையின்றி முன்னிலை படர்க்கைகளிரா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10. மனம் எப்படி அடங்கும்?**

நான் யாரென்னும் விசாரணையினாலேயே மனம் அடங்கும்; நான் யாரென்னும் நினைவு மற்ற நினைவுகளையெல்லாம் அழித்துப் பிணஞ்சுடு தடிபோல் முடிவில் தானும் அழியும். பிறகு சொரூப தரிசனம் உண்டாகும்.

**11. நான் யாரென்கிற நினைவை சதா காலமும் பிடிக்கும் உபாயம் என்ன?**

பிறவெண்ணங்கள் எழுந்தால் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு எத்தனியாமல் அவை யாருக்கு உண்டாயின? என்று விசாரிக்க வேண்டும். எத்தனை எண்ணங்கள் எழினும் என்ன? ஜாக்கிரதையாய் ஒவ்வோர் எண்ணமும் கிளம்பும



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே 'இது யாருக்குண்டாயிற்று?' என்று விசாரித்தால் 'எனக்கு' என்று தோன்றும். 'நான் யார்' என்று விசாரித்தால் மனம் தன் பிறப்பிடத் திற்குத் திரும்பிவிடும்; எழுந்த எண்ணமும் அடங்கிவிடும். இப்படிப் பழகப் பழக மனதிற்குத் தன் பிறப்பி டத்திற் தங்கி நிற்கும் சக்தி அதிகரி க்கின்றது. சூக்ஷ்மமான மனம், மூளை இந்திரியங்கள் வாயிலாய் வெளிப்படும போது ஸ்தூலமான நாம ரூபங்கள் தோன்றுகின்றன; ஹ்ருதயத்தில் தங்கும்போது நாம ரூபங்கள் மறை கின்றன. மனத்தை வெளிவிடாமல் ஹ்ருதயத்தில் வைத்துக் கொண்டிரு ப்பதற்குத் தான் **அகமுகம்** அல்லது **அந்தர்முகம்** என்று பெயர். ஹ்ருதயத் தில் இருந்து வெளியிடுவதற்குத்தான் **பகிர்முகம்** என்று பெயர். இவ்விதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் ஹ்ருதயத்திற் றங்கவே, எல்லா நினைவுகளுக்கும் மூலமான நான் என்பது போய், எப்பொழுதுமுள்ள தான் மாத்திரம் விளங்கும். எதைச் செய்தாலும் நான் என்கிற அகங்காரம அற்றுச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் எல்லாம் சிவ ஸ்வரூபமாய்த் தோன்றும்.

12. **மனம் அடங்குவதற்கு வேறு உபாயங்கள் இல்லையா?**

விசாரணையைத் தவிர வேறு தகுந்த உபாயங்கள் இல்லை. மற்ற உபாயங்களினால் அடக்கினால், மனம் அடங்கினாற் போலிருந்து மறு படியும் கிளம்பிவிடும். பிராணாயா மத்தாலும் மனம் அடங்கும்; ஆனால பிராணன் அடங்கியிருக்கும் வரையில் மனமும் அடங்கியிருந்து, பிராணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படும் போது தானும் வெளிப் பட்டு வாசனை வயத்தாயலையும், மனதிற்கும், பிராணனுக்கும் பிறப்பிடம் ஒன்றே. நினைவே மனதின சொரூபம்; நான் என்னும் நினைவே மனதின் முதல் நினைவு; அதுவே அகங்காரம். அகங்காரம் எங்கிருந்து உற்பத்தியோ, அங்கிருந்துதான் மூச்சும் கிளம்பு கின்றது. ஆகையால் மனம் அடங்கும போது பிராணனும், பிராணன் அடங்கும் போது மனமும் அடங்கும். ஆனால் சுழுத்தியில் மனம் அடங்கியிருந்த போதிலும் பிராணனடங்கவில்லை. தேகத்தின் பாதுகாப்பின் நிமித்தமும், தேகமானது மரித்துவிட்டதோ என்று பிறர் ஐயுறாவண்ணமும் இவ்வாறு ஈச்வர நியதியால் ஏற்பட்டிருக்கிறது. ஜாக்கிரத்திலும், சமாதியிலும் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்குகின்ற போது பிராணன் அடங்குகின்றது. பிராணன் மனதின் ஸ்தூல ரூபமெனப்படும். மரணகாலம வரையில் மனம் பிராணனை உடலில வைத்துக்கொண்டிருந்து, உடல் மரிக்கும் காலத்தில் அதனைக் கவர்ந்து கொண்டு போகின்றது. ஆகையால் பிராணாயாமம் மனத்தை அடக்க சகாயமாகுமேயன்றி மனோ நாசஞ் செய்யாது.

பிராணயாமம் போலவே மூர்த்தித் தியானம், மந்திர ஜபம், ஆகார நியமம் என்பவைகளும் மனத்தை அடக்கும் சகாயங்களே.

மூர்த்தித் தியானத்தாலும், மந்திர ஜபத்தாலும் மனம் ஏகாக்கி ரத்தை அடைகிறது. மனமானது சதா சலித்துக்கொண்டேயிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையின் துதிக்கையில் ஒரு சங்கிலியைக் கொடுத்தால் அது எப்படி வேறொன்றையும் பற்றாமல் அதையே பற்றிக் கொண்டு செல்லுமோ, அப்படியே மனதையும் ஏதோ ஒரு நாமம் அல்லது ரூபத்திற் பழக்கினால் அதையே பற்றிக் கொண்டிருக்கும். மனம் அளவிறந்த நினைவுகளாய் விரிகின்ற படியால் ஒவ்வொரு நினைவும் அதிபலவீனமாகப் போகின்றது. நினைவுகள் அடங்க அடங்க ஏகாக் கிரத் தன்மையடைந்து, அதனாற் பலத்தையடைந்த மனத்திற்கு ஆத்ம விசாரம் சுலபமாய் சித்திக்கும். எல்லா நியமங்களினுஞ் சிறந்த மித சாத்வீக ஆகார நியமத்தால் மனத்தின் சத்வகுணம் விருத்தியாகி ஆத்மவிசாரத்திற்கு சகாயம் உண்டாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. **விஷய வாசனை (நினைவு)கள் அளவற்றனவாய்க் கடலில் அலை போலத் தோன்றுகின்றனவே அவைக ளெல்லாம் எப்போது நீங்கும்?**

சொரூபத் தியானம் கிளம்பக் கிளம்ப நினைவுகள் எல்லாம் அழிந்துவிடும்.

14. **தொன்றுதொட்டு வருகின்ற சகல விஷய வாசனைகளும் ஒடுங்கி, சொரூபமாத்திரமாய் இருக்க முடியுமா?**

'முடியுமா, முடியாதா?' என்னும் சந்தேக நினைவுக்கும் இடங்கொடாமல், சொரூபத் தியானத்தை விடாப் பிடியாய்ப் பிடிக்க வேண்டும். ஒருவன் எவ்வளவு பாவியாயிருந்தாலும் 'நான் பாவியாய் இருக்கிறேனே! எப்படிக் கடைத்தேறப் போகிறேன்?' என்றேங்கி அழுது கொண்டிராமல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பாவி என்னும் எண்ணத்தையும் அறவேயொழித்து சொருபத் தியானத்தில் ஊக்கம் உள்ளவனாக இருந்தால் அவன் நிச்சயமாய் உருப்படுவான். நல்ல மனம் என்றும், கெட்ட மனம் என்றும் இரண்டு மனங்களில்லை; மனம் ஒன்றே. வாசனைகளே சுபம் என்றும், அசுபம் என்றும் இரண்டு விதம். மனம் சுபவாசனை வயத்தாய் நிற்கும் போது நல்ல மனம் என்றும், அசுப வாசனை வயத்தாய் நிற்கும் போது கெட்ட மனம் என்றும் சொல்லப்படும்.

பிரபஞ்ச விஷயங்களிலும் பிறர் காரியங்களிலும் மனதை விடக்கூடாது. பிறர் எவ்வளவு கெட்டவர்களாய் இருந்தாலும், அவர்களிடத்தில் துவேஷம் வைக்கலாகாது. விருப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுப்பு இரண்டும் வெறுக்கத்தக்கன. பிறருக்கொருவன் கொடுப்பதெல்லாம் தனக்கே கொடுத்துக் கொள்ளுகிறான். இவ் உண்மையை அறிந்தால் எவன் தான் கொடா தொழிவான்? தான் எழுந்தால் சகலமும் எழும்; தான் அடங்கினால் சகலமும் அடங்கும். எவ்வளவுக் கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நன்மையுண்டு. மனத்தை அடக்கிக் கொண்டிருந்தால் எங்கே இருந்தாலும் இருக்கலாம்.

15. **விசாரணை எதுவரையில் வேண்டும்?**

மனத்தின்கண் எதுவரையில் விஷய வாசனைகள் இருக்கின்றனவோ, அது வரையில் நான் யார் என்னும் விசாரணையும் வேண்டும். நினைவுகள் தோன்றத் தோன்ற அப்போதைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதே அவற்றையெல்லாம் உற்பத்தி ஸ்தானத்திலேயே விசாரணையால் நசிப்பிக்க வேண்டும். ஒருவன் சொரூபத்தை அடையும் வரையில் நிரந்தர சொரூப ஸ்மரணையைக் கைப்பற்றுவானாயின் அதுவொன்றே போதும், கோட்டைக்குள் எதிரிகள் உள்ள வரையில் அதில் இருந்து வெளியே வந்து கொண்டிருப்பார்கள்; வரவர அவர்களை எல்லாம் வெட்டிக் கொண்டே இருந்தால் கோட்டை கைவசப்படும்.

16. **சொரூபத்தின் இயல்பு என்ன?**

யதார்த்தமாய் உள்ளது ஆத்ம சொரூபம் ஒன்றே. ஜக, ஜீவ, ஈச்வரர்கள் சிப்பியில் வெள்ளி போல் அதிற் கற்பனைகள்; இவை மூன்றும் ஏக காலத்தில் தோன்றி, ஏக காலத்தில் மறைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என்கிற நினைவு கிஞ்சித்தும் இல்லாத இடமே சொரூபம ஆகும். அதுவே மௌனம் எனப்படும். சொரூபமே ஜகம்; சொரூபமே நான்; சொரூபமே ஈச்வரன்; எல்லாம சிவ சொரூபமே.

17. **எல்லாம் ஈசன் செயலன்றோ?**

இச்சா சங்கல்ப யத்தனம் இன்றி எழுந்த ஆதித்தன் சன்னிதி மாத்திரத்தில் காந்தக்கல் அக்கினியைக் கக்குவதும், தாமரை அலர்வதும், நீர வற்றுவதும், உலகோர் தத்தங் காரியங்களிற் பிரவிருத்தித்து இயற்றி அடங்குவதும், காந்தத்தின் முன் ஊசி சேஷ்டிப்பதும் போல, ஈசன் சன்னிதான விசேஷ மாத்திரத்தால் நடக்கும் முத்தொழில அல்லது பஞ்ச கிருத்தியங்கட்கு உட்பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மானுசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேசஷ்டித் தடங்குகின்றனர். அன்றி, அவர் சங்கல்ப ஸஹிதரல்லர்; ஒரு கருமமும் அவரையொட்டாது. அது, லோக கர்மங்கள் சூரியனை ஒட்டாததும், ஏனைய சதுர் பூதங்களின் குணா குணங்கள் வியாபகமான ஆகாயத்தை ஒட்டாததும் போலும்.

**18. பக்தருள் மேலான பக்தர் யார்?**

எவன் தன்னையே, கடவுளாகிய சொரூபத்தினிடத்தில் தியாகம் செய்கிறானோ அவனே சிறந்த பக்திமான். ஆத்ம சிந்தனையைத் தவிர வேறு சிந்தனை கிளம்புவதற்குச் சற்றும் இடங்கொடாமல் ஆத்ம நிஷ்டாபரனாய் இருப்பதே தன்னை ஈசனுக்களிப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் பேரில் எவ்வளவு பாரத்தைப் போட்டாலும், அவ்வளவையும் அவர் வகித்துக் கொள்ளுகிறார். சகல காரியங்களையும் ஒரு பரமேச்வர சக்தி நடத்திக்கொண்டிருக்கின்ற படியால், நாமும் அதற்கு அடங்கி யிராமல், 'இப்படிச் செய்ய வேண்டும் அப்படிச் செய்ய வேண்டும்' என்று சதா சிந்திப்பதேன்? புகைவண்டி சகல பாரங்களையும் தாங்கிக்கொண்டு போவது தெரிந்திருந்தும் அதிலேறிக் கொண்டு போகும் நாம் நம்முடைய சிறிய மூட்டையையும் அதில் போட்டுவிட்டுச் சுகமாயிராமல், அதை நமது தலையிற் தாங்கிக்கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. வைராக்கியமாவது எது?**

எவ்வெந் நினைவுகள் உற்பத்தி யாகின்றனவோ அவற்றையெல்லாம் ஒன்றுகூட விடாமல் உற்பத்தி ஸ்தானத்திலேயே நசுக்கிப் போடுவதே வைராக்கியமாம். முத்துக் குளிப்போா தம்மிடையிற் கல்லைக் கட்டிக் கொண்டு மூழ்கிக் கடலடியிற் கிடைக்கும் முத்தை எப்படி எடுக்கிறாா களோ, அப்படியே ஒவ்வொருவனும் வைராக்கியத்துடன் தன்னுள் ஆழந்து மூழ்கி ஆத்ம முத்தை அடையலாம்.

**20. கடவுளாலும், குருவாலும் ஒரு ஜீவனை முக்தனாக்க முடியாதா?**

கடவுளும், குருவும் முத்தியடை வதற்கு வழியைக் காட்டுவார்களே அல்லாமல், தாமாகவே ஜீவர்களை முக்தியிற் சேர்க்கார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளும், குருவும் உண்மையில் வேறல்லர். புலி வாயிற்பட்டது எவ்வாறு திரும்பாதோ, அவ்வாறே குருவின் அருட்பார்வையிற் பட்டவர்கள அவரால் ரக்ஷிக்கப்படுவரேயன்றி ஒருக்காலும் கைவிடப்படார்; எனினும், ஒவ்வொருவரும் தம்முடைய முயற்சியினாலேயே கடவுள் அல்லது குரு காட்டிய வழிப்படி தவறாது நடந்து முத்தியடைய வேண்டும். தன்னைத் தன்னுடைய ஞானக் கண்ணால், தானே அறியவேண்டுமே அல்லாமல், பிறராலெப்படி அறியலாம்? ராமன் என்பவன் தன்னை ராமன் என்று அறிவதற்கு கண்ணாடி வேண்டுமோ?

**21. முக்தியில் விருப்பமுள்ளவனுக்குத் தத்துவங்களின் விசாரணை அவசியமா?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பையைக் கூட்டித் தள்ள வேண்டிய ஒருவன் அதை ஆராய்வதால எப்படிப் பயனில்லையோ, அப்படியே தன்னை அறியவேண்டிய ஒருவன், தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் தத்துவங்கள் அனைத்தையும் சேர்த்துத் தள்ளிவிடாமல் அவை இத்தனையென்று கணக்கிடுவதாலும், அவற்றின் குணங்களை ஆராய்வதாலும் பயனில்லை. பிரபஞ்சத்தை ஒரு சொப்பனத்தைப் போல் எண்ணிக் கொள்ளவேண்டும்.

22. **நனவிற்கும், கனவிற்கும் பேதமில்லையா?**

நனவு (ஜாக்ரம்) தீர்க்கம், கனவு (சொப்பனம்) க்ஷணிக மென்பது தவிர வேறு பேதமில்லை. ஜாக்ரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் விவகாரங்கள் எல்லாம் எவ்வளவு உண்மையாகத் தோன்று கின்றனவோ, அவ்வளவு உண்மை யாகவே சொப்பனத்தில் நடக்கும் விவகாரங்களும் அக்காலத்தில் தோன்றுகின்றன. சொப்பனத்தில் மனம் வேறொரு தேகத்தை எடுத்துக் கொள்கிறது. ஜாக்ரம் சொப்பனம் இரண்டிலும், நினைவுகளும் நாம ரூபங்களும் ஏககாலத்தில் நிகழ்கின்றன.

**23. முமுக்ஷுக்களுக்கு நூற்படிப்பால் பிரயோஜனம் உண்டா?**

எந்நூலிலும் முத்தியடைவதற்கு மனத்தை அடக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளபடியால், மனோ நிக்ரகமே நூல்களின் முடிவான கருத்து என்று அறிந்துகொண்ட பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களை அளவின்றிப் படிப்பதாற் பயனில்லை. மனத்தை அடக்குவதற்குத் தன்னை யாரென்று தன்னுள் விசாரிக்க வேண்டுமே அல்லாமல், எப்படி நூல்களில் விசாரிப்பது? தன்னைத் தன்னுடைய ஞானக் கண்ணாற் தானே அறியவேண்டும். 'தான்' பஞ்ச கோசங்களுக்குள் இருப்பது; நூல்களோ அவற்றிற்கு வெளியில் இருப்பவை; ஆகையால், பஞ்சகோசங்களையும் நீக்கி விசாரிக்க வேண்டிய தன்னை நூல்களில் விசாரிப்பது வீணே. கற்றவை அனைத்தையும் ஒரு காலத்தில் மறக்கவேண்டி வரும்.

24. சுகமாவது யாது?

சுகமென்பது ஆத்மாவின் செருபமே; சுகமும் ஆத்ம சொருபமும் வேறன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சப் பொருள் ஒன்றிலாவது சுகம் என்பது கிடையாது. அவைகளில இருந்து சுகம் கிடைப்பதாக நாம் நமது அவிவேகத்தால் நினைக்கின் றோம். மனம் வெளிவரும் போது துக்கத்தை அனுபவிக்கிறது. உண்மையில் நமது எண்ணங்கள் பூர்த்தியாகும் போதெல்லாம் அது தன்னுடைய யதாஸ்தானத்திற்குத் திரும்பி ஆத்ம சுகத்தையே அனுபவி க்கிறது. அப்படியே, தூக்கம், சமாதி, மூர்ச்சை காலங்களிலும், இச்சித்த பொருள் கிடைக்கின்ற போதும், வெறுத்த பொருளுக்குக் கேடுண்டாகும் போதும், மனம் அந்தர்முகமாகி ஆத்ம சுகத்தையே அனுபவிக்கிறது. இப்படி மனம் ஆத்மாவை விட்டு வெளியே போவதும் உள்ளே திரும்புவதுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வின்றி அலைகிறது. மரத்தடியில் நிழல் சுகமாயிருக்கிறது. வெளியில் சூரிய வெப்பம் கொடுமையாக இருக்கிறது. வெளியில் அலையும் ஒருவன் நிழலிற் சென்று குளிர்ச்சி அடைகிறான். சிறிது நேரத்திற்குப் பின் வெளிக்கிளம்பி வெப்பத்தின் கொடுமைக் காற்றாது, மறுபடியும் மரத்தடிக்கு வருகின்றான். இவ்வாறு நிழலினின்று வெயிலிற் போவதும், வெயிலினின்று நிழலிற் செல்வதுமாய் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் அவிவேகி. ஆனால் விவேகியோ நிழலை விட்டு நீங்கான். அப்படியே ஞானியின் மனமும் பிரம்மத்தை விட்டு நீக்குவதில்லை. ஆனால் அஞ்ஞானியின் மனமோ பிரபஞ்சத்தில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழன்று துக்கப்படுவதும், சிறிது நேரம் பிரம்மத்திற்குத் திரும்பி சுகம் அடைவதுமாய் இருக்கின்றது. ஜகம் என்பது நினைவே. ஜகம் மறையும் போது அதாவது நினைவற்ற போது, மனம் ஆனந்தத்தை அனுபவிக்கின் றது; ஜகம் தோன்றும் போது அது துக்கத்தை அனுபவிக்கின்றது.

**25. ஞானதிருஷ்டி என்றால் என்ன?**

சும்மா விருப்பத்திற்குத் தான் ஞான திருஷ்டி என்று பெயர். சும்மா விருப்பதாவது, மனத்தை ஆத்ம சொரூபத்தில் லயிக்கச் செய்வதே; அன்றி பிறர் கருத்தறிதல், முக்காலம உணர்தல், தூர தேசத்தில் நடப்பன அறிதல் ஆகிய இவை ஞான திருஷ்டியாக மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. **நிராசைக்கும், ஞானத்திற்கும் சம்பந்தம் என்ன?**

நிராசையே ஞானம், நிராசை வேறு, ஞானம் வேறன்று; உண்மையில் இரண்டும் ஒன்றே. நிராசை என்பது ஒரு பொருளிலும் மனம் செல்லாமல் இருப்பது. ஞானம் என்பது ஒரு பொருளும் தோன்றாது இருப்பது. என்றால், அன்னியத்தை நாடாது இருத்தல் வைராக்கியம் அல்லது நிராசை; தன்னை விடாதிருத்தல் ஞானம்.

27. **விசாரணைக்கும், தியானத்திற்கும பேதமென்ன?**

விசாரணையாவது தன்னிடத்திலேயே மனதை வைத்துக் கொண்டிருப்பது. தியானமாவது தன்னைப் பிரம்மம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் சச்சிதானந்தம் என்றும் பாவிப்பது.

28. **முக்தி என்றால் என்ன?**

பந்தத்தில் இருக்கும் தான் யார் என்று விசாரித்துத் தன் யதார்த்த சொருபத்தைத் தெரி[redacted] ந்து கொள்வதே முக்தி.

*ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்து.*

**இருமுலை நடுமார் படிவயி றிதன்மேல்**
**இருமுப் பொருளுள நிறம்பல விவற்றுள்**
**ஒருபொரு ளாம்பல ரும்பென வுள்ளே**
**இருவிரல் வலத்தே யிருப்பது மிதயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லகத்திலிருந்து நீக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. E. THAVARAJAH
MBBS (SL) DFM (SL) MCGP (ASC)
REG No. 9205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Luxmi Printer Colombo - 13. Tel : 2448545

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org